**செ.வெ.எண்.126/2018** **நாள்: 23.03.2018**

**மது அருந்துவதனால் ஏற்படும் தீமைகள் குறித்து பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது துவக்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று மதுவிலக்கு அமல்பிரிவு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் கல்வித்துறை சார்பில் மாணவ-மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மாணவ-மாணவிகள் மூலம் எடுத்துச் செல்லப்படும் கருத்துக்கள் பொதுமக்களை எளிதில் சென்றடையும் என்கிற காரணத்தினால் மது அருந்துவதினால் ஏற்படும் தீமைகள் குறித்த இப்பேரணி ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இப்பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் வளாகத்திலிருந்து தொடங்கிய பேரணி காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தை சென்று நிறைவடைந்தது. பேரணியில் பங்கேற்ற பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி, அந்திரசன் மேல்நிலைப் பள்ளி, பெரிய காஞ்சிபும் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, டாக்டர் பி.எஸ்.எஸ்.சீனிவாச நகராட்சி மேல்நிலைப்பள்ளி, நாராயணகுரு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் விக்டோரிய மேட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் சுமார் 400 பேர் இப்பேரணியில் பங்கேற்று மது அருந்துவதினால் ஏற்படும் தீமைகள் குறித்த வாசகங்களை அடங்கிய பாதகைகளை ஏந்தி, முழக்கங்களை எழுப்பியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

பேரணியில் “போதை பழக்க அடிமை வாழ்வில் மடமை”, “மது நாட்டுக்கும், வீட்டுக்கும், உயிருக்கும் கேடு”, “குடிகெடுக்கும் மதுவை ஒழிப்போம்”, “குடி குடியை கெடுக்கும் குடிபழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்”, “தள்ளிவை! தள்ளிவை! போதைப் பொருளை தள்ளவை!”, “மதியை கொடுத்து, மதுவை ஒழிப்போம்”, “தொடாதே! தொடாதே! போதைப் பொருளை தொடாதே” போன்ற வாசகங்களை எழுப்பி சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் துணை காவல்துறை கண்காணிப்பாளர் (கலால்) திரு.ஏ.அஸ்லாம் பாஷா, மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.ப.மகேஸ்வரி, உதவி ஆணையர் (கலால்) திரு.எஸ்.நடராஜன், காஞ்சிபுரம் காவல்துறை ஆய்வாளர் (கலால்) திரு.லட்சுமிபதி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்